# தி கே.சி.பி. லிமிடெட்

CIN: L65991TN1941PLC001128
பதிவு அலுவலகம் : "ராமகிருஷ்ணா பில்டிங்ஸ்" 2, டாக்டர் பி.வி.செரியன் க்ரசண்ட், எழும்பூர், சென்னை 600 008. தொ.பே.: 66772600
ஃபேக்ஸ் : 66772620 இணையதளம் : www.kcp.co.in
ஈ-மெயில் : investor@kcp.co.in

வருடாந்திர பொதுக் கூட்ட அறிக்கையில் (AGM) தரப்பட்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்களை பரிவர்த்தனை செய்வதற்கான கம்பெனி உறுப்பினர்களின் எழுபத்தைந்தாவது வருடாந்திர பொதுக் கூட்டம், **திங்கட்கிழமை, 8, ஆகஸ்ட் 2016 அன்று காலை 10.25 மணிக்கு,** கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பது அறிவிக்கப்படுகிறது.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 101, அதனுடன் விதி 18 கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, செபி (LODR) ஒழுங்குமுறைகள், 2015, ஒழுங்குமுறை 36ன்படி மற்றும் பொதுக் கூட்டங்கள் மீது செயலக தரத்தின்படி (SS-2), 2015–16ம் ஆண்டிற்கான கம்பெனியின் ஆண்டறிக்கையுடன் AGMக்கான அறிவிப்பு, எமது பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர்களான (RTA) M/s. இன்டக்ரேட்டட் எண்டர்பிரைசஸ் (இந்தியா) லிமிடெட் அல்லது டெபாசிட்டரி பங்குதாரர்களிடம் (DP) தங்களது மின்னஞ்சலினை பதிவு செய்திருக்கும் உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளது. மின்னஞ்சலினை பதிவு செய்யாதிருக்கும் உறுப்பினர்களுக்கு, அனுமதிக்கப்பட்ட முறையில் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20 ஒதுக்கீடுகள் மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்தியமைக்கப்பட்ட விதிகள் 2015 (சட்டரீதியான மாற்றங்கள், விளக்கங்கள், விலக்களித்தல்கள் அல்லது செபி (LODR) ஒழுங்குமுறைகள், 2015, ஒழுங்குமுறை 44ன்படி அமலில் உள்ளதற்கான மறு எனாக்ட்மென்ட் மற்றும் பொதுக் கூட்டங்கள் மீது செயலக தரத்தின்படி (SS-2), மே 27, 2016 அன்று தேதியிட்ட, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் தரப்பட்டுள்ள அனைத்துத் தீர்மானங்களையும் உறுப்பினர்கள் (ரிமோட் மின்னணு வாக்கெடுப்பின் மூலம்), வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்திற்குத் தவிர வேறு இடத்திலிருந்து, நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) வழங்கும் மின்னணு வாக்கெடுப்பு சேவையின் மூலம் பதிவு செய்யும் வசதியை கம்பெனி வழங்கியுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவுக் காலம் வியாழக்கிழமை, 4 ஆகஸ்ட் 2016 காலை 9.00 மணிக்கு (IST) துவங்கி ஞாயிற்றுக்கிழமை, 7 ஆகஸ்ட் 2016 மாலை 5.00 மணிக்கு (IST) முடிவுறும். அதன் பின்னர் மின்னணு வாக்குப்பதிவில் வாக்களிக்கும் முறையை NSDL செயலிழக்கச் செய்யும். இந்தக் காலத்தில், இறுதி தேதியான திங்கட்கிழமை, 1 ஆகஸ்ட் 2016 அன்று கம்பெனியின் பங்குகளை நேரடி வடிவில் அல்லது டீமெட்டீரியலைஸ் வடிவில் வைத்துள்ள உறுப்பினர்கள் ரிமோட் மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்கலாம். உறுப்பினர் ஒரு தீர்மானத்தின்மீது வாக்கினை பதிவு செய்தபின், அதைத் தொடர்ந்து மாற்றம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

உறுப்பினர்களின் வாக்கெடுப்பு உரிமை, இறுதி தேதியான (01.08.2016) அன்று அவர்கள் வைத்துள்ள சமபங்குகளின் விகிதத்தைப் பொறுத்து அமையும்.

AGM அறிக்கை அனுப்பிய பின்னர் கம்பெனியில் உறுப்பினராகச் சேர்ந்து, இறுதி தேதியன்று பங்குகளை வைத்துள்ளவர்கள், கம்பெனியின் இணையதளத்தில் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில், ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு பற்றி விரிவாகத் தரப்பட்டுள்ள செயல்பாட்டு முறையைப் பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிவிப்பு **http://www.kcp.co.in/financialresults.htm#75AGM** என்ற இணையதளத்திலும் கிடைக்கப்பெறும். இறுதி தேதியன்று கம்பெனியிலிருந்து உறுப்பினர் வெளியேறிய பின்னர், வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பைப் பெற நேர்ந்தால், அதனை தகவல் நோக்கத்திற்காக மட்டும் கருத வேண்டும்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 107 ஏற்பாடுகளின் அடிப்படையில், ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு வசதியை கம்பெனி உறுப்பினர்களுக்கு வழங்குவதால், AGMல் கையை உயர்த்தி வாக்களிக்க இயலாது. ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்காத உறுப்பினர்கள், கூட்டத்தில் கலந்து கொள்ளும்போது AGMல் வாக்குத் தாளில் வாக்களிக்கும் வசதியை கம்பெனி வழங்குகிறது. எனினும், ஏற்கனவே ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் AGMல் கலந்து கொள்ளலாம், ஆனால் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். ஒரு உறுப்பினர் இரு வகையிலும் வாக்களித்தால், அதாவது, ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு மற்றும் AGMல் வாக்குத் தாளில் வாக்களித்தால், ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு மூலம் பதிவு செய்த வாக்கு கணக்கில் எடுக்கப்பட்டு, வாக்குத் தாளில் பதிவு செய்த வாக்கு செல்லாததாகக் கருதப்படும்.

வாக்குப்பதிவை ஆய்வு செய்யவும் மற்றும் ரிமோட் மின்னணு வாக்குப்பதிவை நேர்மையான மற்றும் தெள்ளத்தெளிவான முறையில் நடத்திடவும் கம்பெனிச் செயலராகத் தொழில் புரிந்து வரும் திரு. R. பாலசுப்ரமணியம் (FCS: 2397) அவர்களை ஆய்வாளராக (scrutinizer) கம்பெனி நியமித்துள்ளது.

அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கையைப் பெறாத உறுப்பினர்கள் **http://www.kcp.co.in/financialresults.htm#75AGM** என்ற கம்பெனி இணையதளத்திலிருந்து அல்லது **www.evoting.nsdl.com** என்ற நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)ன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ரிமோட் மின்னணு வாக்கெடுப்பு தொடர்பாக AGM அறிவிப்பில் தரப்பட்டுள்ள அறிவுரைகளை உறுப்பினர்கள் கவனமாகப் படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ரிமோட் மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பாக வினாக்கள்/இடர்பாடுகள்/குறைகள் ஏதேனுமிருப்பின், அதனை அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதியை அல்லது **www.evotingnsdl.com** என்ற இணையதளத்தில், பதிவிறக்கப் பிரிவிலுள்ள உறுப்பினர்களுக்கான மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டினைப் பார்க்கலாம் அல்லது கீழ்க்கண்டவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்/அவர்களை அணுகிப் பெறலாம் :

அ) திரு ராஜீவ் ரன்ஜன், rajivr@nsdl.co.in, 022-24994738, இலவச உதவி எண். 1800-222-990

ஆ) திரு Y. விஜயகுமார், vijaycs@kcp.co.in, 044-66772622.

AGMல் பரிவர்த்தனைக்கு உள்ள அலுவல் இனங்களின் ஆவணங்கள், கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் சாதாரண அலுவல் நேரங்களில் அனைத்து நாட்களிலும் (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர), கம்பெனியின் AGM நடைபெறும் தினம் வரை ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கும்.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 91ன்படி மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014, விதி 10ன்படி மற்றும் செபி (LODR) ஒழுங்குமுறை விதிகள் 2014, ஒழுங்குமுறை விதி 42ன்படி, உறுப்பினர்களின் பதிவேடும் மற்றும் பங்கு மாற்று புத்தகங்களும், 01.08.2016 முதல் 08.08.2016 வரை (இரு நாட்களும் உட்பட), கம்பெனியின் எழுபத்தைந்தாவது வருடாந்திர பொதுக் கூட்டத்திற்காக மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

கூட்டம் நடைபெறும் இடத்திற்கான நுழைவு, உறுப்பினர்களுக்கான அறிவிப்புடன் சேர்த்து அனுப்பப்பட்டுள்ள வருகைச் சீட்டின்மூலம் கட்டுப்படுத்தப்படும்.

தி கே.சி.பி. லிமிடெட்டுக்காக
கவிதா D. சித்தூரி
செயல் இயக்குநர்

இடம் : சென்னை
தேதி : 18.07.2016